1972 டிசம்பர் 8]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திருச்சியில் இந்த மாதம் 2, 3, 4 ஆகிய நாட்களில் மாணவர்கள், பஸ் தொழிலாளர்கள், போலீசார் ஆகியோரிடையே எழுந்த விரும்பத்தகாத மோதல்களைப்பற்றியும் அதன் தொடர்பான நிகழ்ச்சிகளைப்பற்றியும் எனக்குக் கிடைத்த தகவல்களை வைத்து 6—12—1972 அன்று இந்த அவையில் சில விபரங்களைக் கூறியிருக்கிறேன். மேலும் நமது சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள் திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரி முதல்வருடன் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு மேலும் சில விபரங்களைப் பெற்றுள்ளார். திருச்சியில் டிசம்பர், 2, 3, 4 ஆகிய மூன்று நாட்களிலும் நடந்துள்ள அசம்பாவித நிகழ்ச்சிகள் குறித்து நீதி விசாரணை நடைபெறுவதற்கு மாவட்ட நீதிபதி அளவில் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று அரசின் சார்பில் அறிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) புயல்-மழையினால் ஏற்பட்டுள்ள சேதங்களும், அரசு மேற்கொண்டுள்ள துயர் தணிப்புப் பணிகளும் குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வங்கக் கடலில் 4—12—1972 காலை 8 மணி அளவில், கடலூரில் இருந்து, 370 கிலோ மீட்டர் தென்கிழக்கே புயல் உருவாகி, அது மேலும் வலுப்பெற்று மேற்கு நோக்கி நகர்ந்து, 6—12—1972 காலை சுமார் 5 மணி அளவில் கடலூர் கரையைக் கடந்தது. இதன் காரணமாக சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களின் கடற்கரை ஓரங்களின் பெரு மழையும் சூறாவளிக் காற்றும் ஏற்பட்டது.

இந்தப் பெருமழையின் காரணமாக நுங்கம்பாக்கம் வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் டிசம்பர் திங்கள் 5, 6 ஆகிய தேதிகளில் 33 மணி நேரத்தில் 152 மி.மீ. மழை பெய்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மீனம்பாக்கம் வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் 183 மி.மீ. மழை பதிவு செய்யப்பட்டுள்ளது.

புயலைப்பற்றிய முன்அறிவிப்பு கடற்கரைப் பகுதிகளில் உள்ளவர்களுக்கும் தாழ்வான பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கும் கொடுக்கப்பட்டு அவர்கள் உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி எச்சரிக்கைச் செய்யப்பட்டார்கள்.

சென்னை :

இந்த புயல்காற்றினாலும் மழையினாலும் வட சென்னையிலும், தென் சென்னையிலும் கீழ்க்கண்ட தாழ்வான பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் ;—

வட சென்னை—

1. இராயபுரம்.
2. கொருக்குப்பேட்டை.

3. வண்ணுரப்பேட்டையில் சில இடங்கள்.
4. புளியந்தோப்பு.
5. வியாசர்பாடி.
6. செம்பியம்.

தென் சென்னை—

1. தியாகராய நகர்
2. நுங்கம்பாக்கத்தில் சில பகுதிகள்.
3. அடையாறு
4. கோடம்பாக்கம்
5. சைதாப்பேட்டை.

இதனுல் சுமார் 21,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மாநகராட்சி அதிகாரிகள் அவர்களை அருகாமையில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் இருக்க ஏற்பாடு செய்து 5—12—1972 அன்றும் 6—12—1972 அன்றும் அவர் களுக்கு உணவுப் பொட்டலங்கள் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிருர்கள். 5—12—1972 அன்று சுமார் 40,000 உணவுப் பொட்டலங்கள் கொடுக்கப் பட்டன. 6—12—1972 அன்று பகலிலும், மாலையிலும் ஒவ்வொரு வேளைக்கும் சுமார் 76,000 உணவுப் பொட்டலங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 40 வீதம் நிவாரண நிதியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மின்சாரம் தாக்கியதன் காரணமாக பெரம்பூரில் குப்புசாமி என்ற 85 வயது கிழவரும் நுங்கம்பாக்கத்தில் 13 வயது சிறுவன் ஆறுமுகமும், வீட்டுச் சுவர் இடிந்ததன் காரணமாக அய்யனுவரத்தில் ஜெயச்சந்திரன் என்ற 4 வயது சிறுவனும் இறந்துவிட்டார்கள்.

சென்னை மாநகராட்சி மேயரும், கமிஷனரும் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டுத் தேவையான நிவாரண வேலைகளை மேற்கொண்டுள்ளனர்.

செங்கற்பட்டு.—சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் மதுராந்தகம், அரசூர் ஆகிய ஊர்களுக்கருகில் நான்கு இடங்களில் மழைநீர், மாற்றுப் பாதை களின் மேல் செல்வதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருக்கிறது. இவற்றை சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்று மாலைக்குள் அநேகமாக இந்த வேலைகள் பூர்த்தியாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டு சிறிய நீர்ப்பாசன குளங்களும் ஒரு பொதுப் பணித்துறை குளமும் உடைந்துள்ளது. இந்த உடைப்புகளைச் செப்பனிட உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென்னாற்காடு மாவட்டம்.—கடலூரில் கடிலம் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மின்சாரம், செய்தி தொடர்பு, மற்றும் போக்குவரத்து முழுதும் துண்டிக்கப்பட்டது. தளங்காடு, பனங்காட்டூர் காலனி ஆகிய இடங்களில் சில வீடுகள் சேதமடைந்துள்ளன. பழைய மருத்துவ விடுதி சாலையில் ஒரு குடிசையின்மீது மரம் விழுந்ததால் கணவன், மனைவி ஆகிய இருவரும் இறந்துவிட்டார்கள். கடலூரில் சுவர் இடிந்து விழுந்ததால் இரு குழந்தைகள் இறந்துவிட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய ஏற்பாடுகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சென்னை-நாகூர் பயணிகள் வண்டியும், சென்னை-இராமேஸ்வரம் துரித வண்டியும் கடலூரில் நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டன. இந்த வண்டிகளில் இருந்த 1,500 பேர்களுக்கு உணவு வழங்கவும், மற்ற வசதிகள் செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்துள்ளார்.

தஞ்சை மாவட்டம்.—தஞ்சை மாவட்டத்தில் பல பகுதிகளில் பெருமழை பெய்ததன் காரணமாகப் பல தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதன் காரணமாகப் பல இடங்களில் பஸ் போக்குவரத்து தடைப்பட்டது. பாதைகளின்மீது தண்ணீர் ஓடுகின்றது.

தஞ்சாவூர், கும்பகோணம், மாயூரம், சீர்காழி தாலுக்காக்களில் சுமார் 1,000 முதல் 1,500 குடிசைகள் வரை விழுந்துவிட்டன. இந்த குடிசைகள் பெரும்பாலும் மீனவர்களுடையது. வீடிழந்த மீனவர்கள் பாதுகாப்பான இடத்திற்குச் சென்றுள்ளனர். தஞ்சையில் புது மன்னியார் நதியின் தென் கரையில் சில பகுதிகள் உடைந்துள்ளன. அதைச் செப்பனிட பொதுப்பணித் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சீர்காழி தாலுக்காவில் 900 ஏக்கர் நெற்பயிர் நீரில் மூழ்கியுள்ளன. தலைஞாயிறில் 2,340 ஏக்கர் கார் நெற்பயிர் அறுவடை செய்ய இயலாமல் உள்ளது.

மாயவரம், சீர்காழி ஆகிய இடங்களில் 6 கால் நடைகள் இறந்துவிட்டன. சீர்காழி தாலுக்காவில் திருமுல்லைவாசல் ரோட்டில் மரம் விழுந்துள்ளதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

[டாக்டர் மு. கருணுநிதி] [1972 டிசம்பர் 8

கொள்ளிடம், மகேந்திரப்பள்ளி ஆகிய ரோடுகளிலும் மரங்கள் விழுந்துள்ளன. புதுப்பட்டிணம் கிராம ரோட்டில் பல இடங்களிலும் மரம் விழுந்துள்ளதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. விழுந்த மரங்களை வெட்டியெடுத்து அப்புறப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரத்தநாடு நகரில் ஒரு காய்கறி கடை விழுந்ததன் காரணமாக ஒருவர் இறந்து விட்டார்.

கும்பகோணத்தில் இரண்டு வீடுகள் இடிந்தன.

பந்தநல்லூர் கிராமத்தில் ஒரு வீடு இடிந்து விழுந்ததன் காரணமாக மூன்று நபர்கள் காயமுற்றனர். அவர்கள் உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மன்னார்குடியில் வீட்டின் சுவர் ஒன்று இடிந்ததன் காரணமாக ஒரு பெண் காயமுற்ருள். அவரும் உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிருர்.

பாதிக்கப்பட்ட இந்த இடங்களுக்கெல்லாம் அரசு அலுவலர்கள் உடனடியாக அனுப்பப்பட்டுள்ளார்கள். ஆங்காங்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. தேவையான நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தஞ்சாவூர்.—ஒரத்தநாடு தாலுக்காவில் சின்னசாமி நாயுடு என்பவரின் 55 வயது அடைந்த மனைவி திருமதி நவநீத அம்மாள் என்பவர் வீட்டுச் சுவர் இடிந்து விழுந்ததன் காரணமாக 7—12—1972 அன்று இறந்துவிட்டார்கள்.

பட்டுக்கோட்டை தாலுக்காவில் அதிராமபட்டினத்தில் 65 வயதடைந்த ஈசம்மாள் என்பவர் தன் வீட்டின் வாசலுக்கருகில் வெள்ளத்தால் வழிந்தோடிக் கொண்டிருந்த பாதாளச் சாக்கடையில் விழுந்ததால் 7—12—1972 அன்று இறந்து விட்டார்கள்.

தென் ஆற்காடு:—சிதம்பரம் கோயிலில் தென்புறம் உள்ள கோபுரத்தில் உள்ள ஒரு கலசம் 6—12—1972-ஆம் தேதி இரவு வீசிய புயலில் விழுந்து விட்டது. இந்தக் கலசத்தைக் கோயிலில் அதிகாரிகள் எடுத்துப் பத்திரப்படுத்தி உள்ளனர்.